செ.வெ.எண்: 312 நாள்:14.05.2018

# <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>சிறிய அளவிலான பால்பண்ணை அமைத்தல் (Mini Dairy Unit)</u>

தமிழ்நாடு அரசு பால்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் '' **சிறிய அளவிலான 100 பால்பண்ணைகள் (Mini Dairy Unit)**'' ரூ.1.25 கோடி செலவில் 2017 – 2018 ஆம் ஆண்டிற்கு செயல்படுத்த ஆணை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் **திருநெல்வேலி** மாவட்டத்திற்கு **மூன்று** சிறிய அளவிலான பால்பண்ணைகள் **(Mini Dairy Unit)** அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி மொத்த திட்ட செலவினமாக ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் பயனாளியின் பங்குதொகை 75% ரூ.3,75,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் மாநில அரசின் பங்குதொகை ரூ.1,25,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும் ) ஆகும். பால்பண்ணை தொழிலில் விருப்பமுள்ளவர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம்.

பயனாளிகள் மாட்டுக்கொட்டகை கட்டுவதற்கு குறைந்த பட்சம் 300 சதுர அடி நிலம் சொந்தமாகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ வைத்திருக்க வேண்டும் எனவும் மற்றும் பயனாளிகள் தீவனப்புல் வளர்ப்பதற்கு குறைந்தபட்சம் 1 ஏக்கர் நீர்ப்பாசன வசதி கொண்ட நிலம் சொந்தமாகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ வைத்திருக்க வேண்டும்.

பயனாளி ஏற்கெனவே கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் எந்த திட்டத்திலும் பயனடைந்தவராக இருத்தல் கூடாது எனவும் மற்றும் தற்சமயம் பயனாளிகள் சொந்தமாக பசு / எருமை மாடுகள் வைத்திருக்க கூடாது.

பயனாளிகளோ அல்லது உறவினர்களோ (கணவர், தந்தை, தாய், மாமனார், மாமியார், மகன், மகள், மருமகன், மருமகள் ஆகியோர்) மத்திய மற்றும் மாநில அரசிலோ அல்லது மத்திய , மாநில அரசு சார்ந்த நிறுவனங்கள் / கூட்டுறவு மையங்களிலோ பயனாளிகளாக இருக்க கூடாது அல்லது உள்ளூர் அமைப்புகளில் உறுப்பினராக இருக்க கூடாது எனவும், பயனாளி கிராம பஞ்சாயத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

30% பயனாளிகள் ஆதிதிராவிடர் / பழங்குடி இனத்தை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
மாவட்ட ஆட்சித்தலைவரால் தேர்வு செய்யப்படும் பயனாளிகள் பட்டியலே இறுதியானது ஆகும்.

தேர்வு செய்யப்படும் பயனாளிகள் குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் கால்நடைகளை பராமரிக்க வேண்டும். இல்லையெனில் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் 2 நாட்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.